**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 898 of 2025

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : கருப்புசாமி

Father's Name : த/பெ. சின்னசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது கணியூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் எனது அம்மா தோட்டத்தில் வேப்பங்கொட்டை பொறுக்கி கொண்டிருந்தபோது யாரோ ஒருவர் என் அம்மாவை தாக்கி கெட்டவார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார். ஏன் என் பாட்டியை அடிக்கிறீர்கள் என்று என்று எனது மகன் கேட்டதற்கு எனது மகனையும் தாக்கினார். அதனால் என் அம்மா சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 31.07.2023ம் தேதி சுமார் 05.00 மணியளவில் துரைகவுண்டருக்கு சொந்தமான தோட்டத்தில் எனது அம்மா வேப்பங்கொட்டை பொறுக்கி கொண்டிருந்தபோது மகாலட்சுமி என்பவர் என் அம்மா வைத்திருந்த வேப்பங்கொட்டைகளை எடுத்துக்கொண்டிருந்தார். ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு என் அம்மா கீழே தள்ளி விட்டு கையால் தாக்கினார். என் அம்மா வலி தாங்கமுடியால் சத்தம்போடவே நான் ஏன் அடிக்கிறீர்கள் என்று எனது மகன் கேட்டதற்கு எனது மகனையும் தாக்கி என்னை கெட்டவார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் அதனால் அது சம்மந்தமாக எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் அவருக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

(**Sd/- T. Arunkumar**)
**Judicial Magistrate**,
**Sulur**.